பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 04 2025 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, தாய்லாந்தில் நடைபெறும் வங்கக் கடல் பகுதி நாடுகளிடையே ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

2. வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மக்களவையைத் தொடர்ந்து, மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

3. உள்நாட்டு முதலீட்டாளர்கள் புத்தொழில்களில் அதிக அளவு முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Shah – Karan Singh** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, தாய்லாந்தில் நடைபெறும் பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

‘வளம் - நிலைத்தன்மை’ என்ற கருப்பொருளுடன் இந்த உச்சி மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டின்போது 2030ஆம் ஆண்டுக்கான பிம்ஸ்டெக் தொலைநோக்கு பார்வை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்படும்.

பிம்ஸ்டெக் அமைப்பில் இந்தியா, பங்களாதேஷ், பூடான், மியான்மர், நேபாளம், இலங்கை, தாய்லாந்து ஆகிய 7 நாடுகள் இடம்பெற்றுள்ளன.

முன்னதாக தாய்லாந்து பிரதமர் திருமதி **Paetongtarn Shinawatra** உடன் இருதரப்பு உறவுகள் குறித்து திரு. நரேந்திர மோடி பேச்சு நடத்தினார்.

<<<<>>>>

வக்ஃஃப் சட்டத்திருத்த மசோதா மக்களவையைத் தொடர்ந்து மாநிலங்களவையிலும் இன்று அதிகாலை நிறைவேற்றப்பட்டது.

12 மணி நேர விவாதத்திற்குப் பின்னர் நடைபெற்ற வாக்கெடுப்பில், மசோதாவுக்கு ஆதரவாக 128 வாக்குகளும், எதிராக 95 வாக்குகளும் பதிவாகின.

முன்னதாக விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய சிறுபான்மை நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, இந்த சட்டத்திருத்தத்தால் கோடிக்கணக்கான ஏழை இஸ்லாமியர்கள் பயனடைவார்கள் என்று கூறினார்.

இது எந்த வகையிலும் இஸ்லாமியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்று அவர் உறுதிபட தெரிவித்தார்.

அனைத்துத் தரப்பினரின் வளர்ச்சியையும் இலக்காகக் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாகவும், எந்த சமூகத்தினருக்கு எதிராகவும் பாகுபாடு காட்டப்படுவதில்லை என்றும் திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.

<<<<>>>>

உள்நாட்டு முதலீட்டாளர்கள் புத்தொழில்களில் அதிக அளவு முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் 3 நாட்கள் நடைபெறும் புத்தொழில் திருவிழாவை தொடங்கி வைத்துப் பேசிய அவர், ரோபோடிக்ஸ் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் அதிக முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறினார்.

புத்தொழில் நிறுவனங்களில் 3வது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது என்று கூறிய அவர், புதுமைக் கண்டுபிடிப்புகளையும், தொழில்முனைவோரையும் ஊக்விக்க அரசு உறுதிபூண்டுள்ளது என்றார்.

இந்த புத்தொழில் திருவிழா இளையோர் மற்றும் மாணவர்களுக்கு உத்வேகம் அளிப்பதாக அமையும் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

வேளாண்துறை ஆய்வுக் கூட்டம் அத்துறைக்கான அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் சென்னையில் நேற்று நடைபெற்றது.

வேளாண் விற்பனைக் குழுக்களுக்கான கடன்கள், உழவர் சந்தை மற்றும் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகள் போன்றவை குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

சேலம் மாவட்டம் உருவாக்கப்பட்டு இன்றுடன் 233 ஆண்டுகள் நிறைவடைகிறது.

நாட்டிலேயே முதல் மாவட்டமாக உருவாக்கப்பட்ட சேலம் மாவட்டம் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை மறுநாள் ராமேஸ்வரம் வருவதை ஒட்டி அங்கு 4 ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. சந்தீஷ் கூறியுள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தாம்பரம் – ராமேஸ்வரம் இடையே நாளை மறுநாள் பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைக்க உள்ள புதிய விரைவு ரயிலுக்கான முன்பதிவு இன்று காலை 8 மணிக்கு தொடங்க உள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

இந்த ரயில் தாம்பரத்தில் மாலை மணி 6.10க்கு புறப்பட்டு மறுநாள் காலை மணி 5.40க்கு ராமேஸ்வரம் சென்றடையும் என்றும், மறு மார்கத்தில் மாலை 4 மணிக்கு ராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்டு அடுத்த நாள் அதிகாலை மணி 3.45க்கு தாம்பரம் வந்தடையும் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, மதுரை, தஞ்சாவூர், கன்னியாகுமரி உள்ளிட்ட 17 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இன்று இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை குறையக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மருக்கு சர்வதேச உதவிகள் அதிக அளவில் தேவை என ஐநா பொதுச் செயலாளர் திரு அன்டோனியா குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் விரிவாக்கப் பணிகளுக்குக் கடந்த நிதியாண்டில் ஆயிரத்து 316 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் 99 புள்ளி 6 சதவீத மாவட்டங்களில் 5-ஜி சேவைகள் கிடைப்பதாக மத்திய தொலைதொடர்புத் துறை இணையமைச்சர் திரு பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆந்திர மாநிலம் திருப்பதிக்கும் தமிழகத்தின் பழனிக்கும் இடையிலான நேரடி பேருந்துப் போக்குவரத்து சேவையை ஆந்திர துணை முதலமைச்சர் திரு பவன் கல்யாண் திருப்பதியில் நேற்று தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை பகுதியில் மத்திய, மாநில அரசுத் துறைகள் சார்பில் பழங்குடியின விவசாயிகளுக்கான வேளாண் செயல்முறைகள் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் பகுதியில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திரு கமல் கிஷோர் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

தஞ்சாவூர் மாவட்டத்தில் டிஎன்பிஎஸ்சி குரூப்-4 தேர்வுகளுக்கு நடத்தப்படும் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகளுக்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி அணையில் இருந்து இன்று முதல் வரும் 15-ம் தேதி வரை பாசனத்திற்குத் தண்ணீர் திறக்கப்படும் என நிர்வளத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னை மயிலாப்பூர் நாகோஸ்வர ராவ் பூங்காவில் கட்டப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சிக் கூடத்தை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Shah – Karan Singh** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-1, 6-2 என்ற செட் கணக்கில் இத்தாலியின் **Alexandr Binda -** ரஷ்யாவின் **Nikita Lanin** இணையை வென்றது.

<<<<>>>>

**Manchester Open** ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Abhay Singh** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-4, 2-11, 11-7, 11-8 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் **Nathan Lake**-ஐ வென்றார்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 80 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

<<<<>>>>